பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

11 10 2025 SATURDAY 6.30 PM

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. தொழில்நுட்பத்துறையை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்த நடவடிக்கைகள் எண்ணற்ற குடும்பங்களின் செலவுகளை வெகுவாக குறைத்துள்ளது என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

3. ஏழை மக்களின் மேம்பாட்டிற்கான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக மாநில அமைச்சர் திரு ஐ பெரியசாமி கூறியுள்ளார்.

4. நீலகிரி, புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர் மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமுதல் மிக கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. ஜோஹர் கோப்பை ஜூனியர் ஹாக்கிப் போட்டியில் இந்தியா இன்று இங்கிலாந்தை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ----

<<<<<>>>>>

தொழில்நுட்பத்துறையை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, சமூக வலைதளத்தில் பிரதமர் வெளியிட்டுள்ள பதிவில், செமி கண்டெக்டர் மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆகிய துறைகளில் Qualcomm நிறுவனம் முதலீடு செய்ய உள்ளதாக கூறியுள்ளார்.

தொழில்நுட்பத்துறையில் முதலீடு செய்வதற்கு இந்தியாவில் ஏராளமான வாய்ப்புகள் உள்ளதாகவும், இத்துறையில் உலகின் முன்னணி நாடாக உருவெடுப்பதற்கான திறன் இந்தியாவிற்கு உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, புதுதில்லியில் பிரதமர் திரு நரேந்திர மோடியை, Qualcomm நிறுவனத்தின் தலைவரும், அதன் தலைமை செயல் அதிகாரியுமான திரு Cristiano Amon சந்தித்து பேசினார்.

<<<<<>>>>>

சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்த நடவடிக்கைகள் எண்ணற்ற குடும்பங்களின் செலவுகளை வெகுவாக குறைத்துள்ளது என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், நடுத்தர மக்களின் அன்றாட பயன்பாட்டிற்கு தேவையான பால் மற்றும் மளிகைப் பொருட்களின் செலவுகளுக்கான சுமைகளை குறைக்க இந்த நடவடிக்கை உதவியுள்ளதாக கூறியுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடியின் தலைமையின்கீழ் மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகள் இல்லத்தரசிகளின் வாழ்வில் ஒளியேற்றியுள்ளதாக டாக்டர் எல். முருகன் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<>>>>>

நாடு முழுவதும் சீரான மின் விநியோகத்தை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய மின்துறை செயலாளர் திரு பங்கஜ் அகர்வால், நாட்டின் மின்தேவையை கருத்தில்கொண்டு, மின் உற்பத்தித் திட்டங்கள் வகுக்கப்பட்டு வருவதாக கூறினார்.

குறைந்த செலவில் தடையற்ற மின் விநியோகத்தை வழங்குவதற்கு தேவையான கொள்கைகள் மற்றும் தொழில்நுட்ப வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

வரும் 2070-ஆம் ஆண்டிற்குள் கார்பன் வெளியேற்றம் இல்லாத நிலையை அடைவதற்கான நடவடிக்கைகளுக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருவதாக திரு பங்கஜ் அகர்வால் கூறினார்.

<<<<<>>>>>

ஏழை மக்களின் மேம்பாட்டிற்கான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக மாநில ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு ஐ பெரியசாமி தெரிவித்துள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் அருகே கரிசல்பட்டி கிராமத்தில் நடைபெற்ற கிராம சபைக்கூட்டத்தில் கலந்துகொண்டு தூய்மைப் பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி அவர் பேசினார்.

வீடற்றவர்களுக்கு வீடு கட்டித்தருவதற்கான திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதை அவர் சுட்டிக்காட்டினார்.

ஏழை மக்களுக்கு இலவச வீட்டுமனை பட்டா வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

இப்பகுதியில் உள்ள கிராமப்புறங்களுக்கு தூய்மையான குடிநீர் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக திரு ஐ பெரியசாமி தெரிவித்தார்.

<<<<<>>>>>

தமிழகத்தில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள சட்டப்பேரவைத் தேர்தலில், தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றிபெற்று ஆட்சி அமைக்கும் என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிப்புத்தூரில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், கூட்டணியில் இடம்பெறும் கட்சிகள் குறித்த இறுதி விவரங்கள் ஜனவரி மாதத்திற்கு பின்னரே தெரியவரும் என்று கூறினார்.

தமிழகத்தில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் தாம் இன்று பிரச்சார பயணத்தை தொடங்கியுள்ளதாக திரு நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

<<<<<>>>>>

நாடு முழுவதும் பின்தங்கிய 100 மாவட்டங்களில் தானிய உற்பத்தியை பெருக்கிடும் வகையில், தன் தான்ய வேளாண்மைத் திட்டத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று புதுதில்லியில் தொடங்கிவைத்தார்.

வேளாண் உற்பத்தியில் தன்னிறைவு பெரும் வகையில் இந்த திட்டம் தொடங்கப்பட்டுள்ளதாக நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலைய பேராசிரியர் திரு எஸ். அழகுதுறை தெரிவித்தார்.

சிறுதானிய உற்பத்தியை அதிகரிக்கும் வகையில், மத்திய அரசால் தொடங்கப்பட்டுள்ள இந்த திட்டம் பெரிதும் உதவிகரமாக இருக்கும் என்று பயனாளி ஒருவர் தெரிவித்தார்.

<<<<<>>>>>

தமிழகத்தின் நீலகிரி, புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர் மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமுதல் மிக கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர், கோவை மாவட்ட மலைப்பகுதிகள், திருப்பூர், தென்காசி உள்ளிட்ட பத்து மாவட்டங்களில் கனமழைக்கும் வாய்ப்புள்ளதாக தெரிவித்தார்.

இதனிடையே, அரியலூர் மாவட்டத்தில் காற்றுடன் பெய்த மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>>

*<u>மாவட்டச் செய்திகள்</u>*

மதுரை மாவட்ட வேளாண்மைத்துறை சார்பில் உயிர்ம வேளாண்மை கையேட்டினை மாநில அமைச்சர் திரு மூர்த்தி இன்று வெளியிட்டார்.

--------

கன்னியாகுமரி மாவட்டம் ராஜாக்க மங்கலத்தில் தீயணைப்பு நிலையத்தை மாநில அமைச்சர் திரு மனோ தங்கராஜ் திறந்துவைத்தார்.

-------------

மயிலாடுதுறை மாவட்டம் மணக்குடி அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் உணவு பாதுகாப்புத்துறை முதன்மைச் செயலர் திரு சத்தியப்பிரதா சாஹு இன்று ஆய்வு மேற்கொண்டார்.

-------------------

வேலூர் மாவட்டம் பொன்னையாற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நிவாரண முகாம்கள் தயார் நிலையில் உள்ளதாக ஆட்சியர் திருமதி சுப்புலட்சுமி தெரிவித்துள்ளார்.

-----------------

செங்கல்பட்டு தீயணைப்பு நிலையத்தில் நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியில் பள்ளி கல்லூரியை சேர்ந்த ஓட்டுநர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

---------------------

பெரம்பலூர் மாவட்டம் வெண்பாவூரில் வயல்வெளியை சுற்றி அமைக்கப்பட்டிருந்த மின்வேலியில் சிக்கி இரண்டு பேர் உயிரிழந்தனர்.

--------------------

சேலத்தில் மார்பக புற்றுநோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மாணவர்கள் பங்கேற்ற பேரணி நடைபெற்றது.

<<<<<>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

ஜோஹர் கோப்பை ஜூனியர் ஹாக்கிப் போட்டியில் இந்தியா இன்று இங்கிலாந்தை வென்றது.

மலேசியாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியில், இந்தியா தனது முதல் ஆட்டத்தில் 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

---------------

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது நாளான இன்று ஆட்டநேர இறுதியில் வெஸ்ட் இண்டீஸ் தனது முதல் இன்னிங்சில் 4 விக்கெட் இழப்பிற்கு 140 ரன் எடுத்துள்ளது.

தில்லியில் நடைபெற்றுவரும் இப்போட்டியில், இந்தியா தனது முதல் இன்னிங்சில் 5 விக்கெட் இழப்பிற்கு 518 ரன் எடுத்திருந்த நிலையில் ஆட்டத்தை முடித்துக்கொள்வதாக அறிவித்தது.

-----------------

அமெரிக்காவில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் Krisha Mahendran அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

----------------

உதகையில் நடைபெற்று வரும் சர்வதேச அளவிலான கரத்தே போட்டியில் மலேசியா, சிங்கப்பூர், நேபாளம், இலங்கை உள்ளிட்ட பல்வேறு நாடுகளை சேர்ந்த 700-க்கும் மேற்பட்ட வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர்.

<<<<<>>>>>